Sakthi Jothi (translated by Thila Varghese)

# Indigenous Forest

You know
our forefathers
lived in forests.

In their dreams
grew the vision
of thousands of seeds
and the trees
hidden in them.

In the forest
that the flora and fauna,
worms and insects,
birds of all kinds,
and the hungry animals,
have always known
as their very own,
flowers bloomed on plants
to the smell of mating
the pairs of snakes were engaged in.

Later on,
in order to
meet our petty needs,
our fathers' axes
and our own matches
started consuming
the dense forests.

Nowadays,
reduced to

decayed brown memories
of green foliage
devoid of blooming fragrance,
our forefathers’ forest
is swaying in plastic flower pots
in our homes.

சக்தி ஜோதி

# ஆதிவனம்

உங்களுக்குத் தெரியும்
நமது தந்தையர்களின் தந்தையர்
வனங்களில் வசித்திருந்தனர்

அவர்களது கனவுகளில்
கண் வளர்ந்தன
ஆயிரமாயிரம் விதைகளும்
அவற்றிற்குள் மறைந்திருந்த
விருட்சங்களும்

புல்லும் பூண்டும்
புழுவும் பூச்சியும்
பலவகைப் பறவைகளும்
பசிகொண்ட மிருகங்களும்
தங்களுடையதென அறிந்திருந்த
கானகத்தில்
இணைசேரும் சர்ப்பங்களின்
கூடல் வாசனைக்கு
தாவரங்களில் பூக்கள் மலர்ந்தன

நமது
அற்பத் தேவைகளின் பொருட்டு
நம் தந்தையரின் கோடரிகளும்
நம்முடைய தீக்குச்சிகளும்
அடர்ந்த வனங்களை
உண்ணத் தொடங்கின

இப்பொழுது
நமது வீடுகளில்
பூப்பின் வாசனையற்று

பசிய இலைகளின்
பழுப்பு நினைவுகளாய்
பிளாஸ்டிக் தொட்டிகளில்
அசைந்து கொண்டிருக்கிறது
மூதாதையர் வனம்.